**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 70/2024 PW . 1**

**பெயர் :** **உமா** **தந்தை/கணவர் பெயர்: பூமிநாதன்**

**ஊர் :** **தாலுகா:**

**வயது :** **தொழில்:**

**ஜாதி :** **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.09.2025

---

**(எதிரி ஆஜர்).**

**<u>24.09.2025 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது அணைக்கரைப்பட்டியில் வசிக்கிறேன். விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரி எனது உறவுக்காரர் ஆவார். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் சொந்தவேலையாக வெளியூர் சென்றுவிட்டு வீட்டிற்கு வந்து பார்த்தபோது நான் வீட்டில் வைத்திருந்த எனது மகளுக்காக வாங்கிய 11 பவுண் தங்க செயின் காணாமல் போயிருந்தது. அதன் பிறகு ஆராய்ந்து பார்த்தபோது வீட்டின் கதவுகள் உடைக்கப்பட்டு திருட்டுப்பட்டு போயிருந்தது தெரியவந்ததால் இது சம்பந்தமாக சிங்கம்புணரி காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார் கொடுத்த போது எனது உறவினர்கள் எழுதி கொடுத்த புகாரை நான் படித்து பார்க்காமல் கொடுத்துவிட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் கொடுத்த புகார் ஆகும். அதில் உள்ளது எனது கையொப்பம் ஆகும். **அந்த கையொப்பம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பிறகு போலீசார் தகவல் சொல்லி நான் நீதிமன்றத்தில் மனு செய்து நகைகளை பெற்றுக்கொண்டேன். **அது அ.த.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** யார் திருடினார்கள் என்ற விபரம் தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதிக்கப்படுகிறது.</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

2. எதிரியுடன் சேர்ந்து சமரசம் செய்து கொண்டு மனு தாக்கல் செய்து கொண்டேன் என்றால் சரிதான். **அந்த சமரச மனு அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் கொடுத்த புகாரில் எதிரி மீது சந்தேகம் இருப்பதாக சொல்லி போலீசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்த போது என் வீட்டில் தகர பீரோவில் இருந்த 5 பவுன் நெக்லஸ் ஒன்று, ஜிமிக்கியுடன் கூடிய ஒரு ஜோடி தோடு மற்றும் 11 பவுன் அ.சா.பொ.1 தங்க செயின் வைத்திருந்தேன் என்றும் அதே பீரோவில் வெள்ளியாலான மாவிளக்கு கின்னம், குத்துவிளக்கு, வெள்ளி டம்ளர், சந்தன கும்பா, குங்கும சிமில், மாவிளக்கு தட்டுமூடி, சிறிய வெள்ளிக்குடம் ஆகியவை வைத்திருந்தேன் என்றும் 26.12.2023ம் தேதி மாலை 6.30 மணிக்கு எனது மகளிடம் அ.சா.பொ.1 எடுத்து கொடுப்பதற்காக பீரோவை திறந்து பார்த்தபோது பீரோவில் இருந்த டிரா உடைக்கப்பட்டு இருந்தது

என்றும் இதனை நான் எனது மகள், மகனிடம் சொன்னபோது அவர்கள் எதிரி என்னுடைய வீட்டிற்கு வந்தது பற்றி தகவல் சொன்னார்கள் என்றும் 27.12.2023ம் தேதி காவல்நிலையத்திற்கு சென்று எதிரியின் பெயரை குறிப்பிட்டு புகார் கொடுத்து வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்று வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரியுடன் சமரசம் செய்து கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.</u>**